**(சார்பு நீதிமன்றம்), பரமத்தி**

**ஓ.எஸ்.எண்.66/2020** **நாள். 03.06.2026**

2026-ம் ஆண்டு ஜுன் திங்கள் 03-ம் நாள் வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

**வா.சா.1 சண்முகம் த/பெ. முத்துசாமி**

**குறுக்கு விசாரணை**

1) இந்த வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நான் டிப்ளமோ மெக்கானிக்கல் இஞ்ஜினியர் படித்துள்ளேன். எனக்கு தமிழ், ஆங்கிலம் நன்கு படிக்க, எழுத தெரியும். வாதியிடம் நான் ரூபாய் 2,50,000/- லட்சம் குடும்ப செலவிற்காக 23.06.2018-ல் வாங்கியதாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் கடன் வாங்கிய போது, புரோ நோட்டு எழுதிக்கொடுத்தாக இவ்வழக்கில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 புரோ நோட்டில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான், அந்த கையெழுத்துக்களை நான் புரோ நோட்டு தேதியில் போடவில்லை.

2) நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் புரோ நோட்டில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது இல்லை என்று நான் சொல்லியிருந்தால் அது தவறாகும். நான் இந்த வழக்கில் பதிலுரை தாக்கல் செய்வதற்கு முன்பு, மேற்படி புரோ நோட்டை பார்க்கவேண்டும் என்று மனு எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்த 6 வருடத்திற்கு பின்பு, தற்போதுதான் என்னிடம் காண்பிக்கப்படும் தாவா புரோ நோட்டை நான் பார்க்கிறேன் என்றால் சரிதான். நான் கடன் வாங்கியது போல், எனது தந்தையும் கடன் வாங்கியதாக வாதி வேறு ஒரு புரோ நோட்டை வைத்து எனது தந்தைக்கு எதிராக மற்றொரு வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல்

செய்துள்ளார் என்றால் சரிதான்.

3) இந்த வழக்கில் 2019-ம் வருடத்தில் எனது தந்தைக்கு உடல் நிலை சரியல்லை என்று எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனக்கும், எனது அம்மாவிற்கும் உடல்நிலை பாதிப்பு இல்லை என்றால் எனது அம்மாவிற்கு உடல் நிலை பாதிப்பு ஏற்பட்டிருந்தது. எனக்கு உடல் நிலை பாதிப்பு இல்லை. எனது பதிலுரையில் எனது அம்மாவிற்கு உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்ததால், கடன் வாங்கவேண்டிய சூழ்நலை ஏற்பட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. கபிலர்மலை, உழவர் விவசாய சங்கத்தில் நானும், எனது அப்பாவும் உறுப்பினர்கள் இல்லை. கபிலர்மலை, உழவர் விவசாய சங்கத்தில் அந்த பகுதியில் உள்ள பெரும்பாலான விவசாயிகள் மேற்படி சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளார்கள் என்றால் சரிதான்.

4) கபிலர்மலை, உழவர் விவசாய சங்கமானது உரம் மட்டும் விற்பனை செய்யும் சங்கம் என்றால் சரிதான். கபிலர்மலை, உழவர் விவசாய சங்கமானது நிதி நிறுவனம் மற்றும் உரம் விற்பனை செய்யும் சங்கம் ஆகும். கபிலர்மலை, உழவர் விவசாய சங்கமானது நிதி நிறுவனம் இல்லை என்றாலும், உரம் மட்டும் விற்பனை செய்யும் சங்கம் என்றாலும் சரியல்ல. நான் எனது பதிலுரையில், கபிலர்மலை, உழவர் விவசாய சங்கத்தில் வாதியின் மூலமாக கடன் கேட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் 9 மாதங்கள் வட்டி கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன், கபிலர்மலை, உழவர் விவசாய சங்கத்தில் வட்டி கட்டியதற்கு ரசீதுகள் கொடுத்தார்களா என்றால் இல்லை. நான் மேற்படி சங்கத்தில் ரசீது எதுவும் கேட்கவில்லை என்றால் கேட்டேன், மேற்படி சங்கத்தில் உரம் மட்டும் விற்கும் சங்கம் என்பதால், வட்டி செலுத்தியதற்கு ரசீது கொடுக்கமுடியாது என்று சொல்லிவிட்டார்கள்.

5) நான் கபிலர்மலை, உழவர் விவசாய சங்கத்தில் கடன் தொகையை

திருப்பி கொடுக்க நடவடிக்கை எடுத்தேனா என்றால் அசல் தொகை செலுத்துவதற்காக சென்ளேன், அவர்கள் வாங்கவில்லை, அதற்காக நான் மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. வாதி இவ்வழக்கை தாக்கல் செய்த பின்பும், எழுத்துமூலமாக கடன் தொகையை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அறிவிப்பு எதுவும் நான் அனுப்பவில்லை. அதற்கான எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனது தந்தை பேரில் உள்ள வழக்கையும், எனது பேரில் உள்ள வழக்கிற்காகவும், நான்தான் நடவடிக்கை எடுத்து வருகிறேன். எனது தந்தை, அவரின் வழக்கில் என்ன சாட்சியம் அளித்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் இந்த வழக்கிற்கு சம்மந்தப்பட்ட புரோ நோட்டின் பேரில் வாதியிடம் கடன் பெற்றேன் என்றாலும், அதை திருப்பி தராததால், வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. கபிலர்மலை, உழவர் விவசாய சங்கத்தில் வெற்று பாண்டில் என்னிடம் கையெழுத்து பெற்றுக்கொண்டதாகவும், அந்த பாண்டின் அடிப்படையில், வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் நான் இவ்வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

6) வாதியின் சொந்த ஊர் திடுமல் கவுண்டம்பாளையம் என்றால் சரிதான். நான் வசிப்பது திடுமல் கிராமம் ஆகும். எங்கள் ஊரில் இருந்து வாதியின் ஊருக்கு 2 கி.மீ. தொலைவு இருக்கும். வாதி கவுண்டம்பாளையம் பஞ்சாயத்து தலைவராக 5 வருடத்திற்கு மேல் இருந்தார் என்றால் 5 வருடம் தலைவராக இருந்தார். வாதிக்கு விவசாயம் மட்டும்தான் தொழில் என்றால் சரிதான். வாதிக்கு பாத்தியப்பட்ட விவசாய நிலங்கள் சுமார் 25 ஏக்கர் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. வாதிக்கு சொந்தமான வீடு மற்றும் நிலம் உள்ளது. வாதியின் மகன் வெளிநாட்டில் வேலை செய்கிறார். வாதிக்கு விவசாயம் மூலமாக வசதி வாய்ப்பு உள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. வாதியிடம் எனது குடும்ப செலவிற்காக நான் கடன் பெற்றேன் என்றாலும், அதற்காக பாண்டு

எழுதிக்கொடுத்தேன் என்றாலும், மேற்படி கடனை ஏமாற்றுவதற்காக இவ்வழக்கை நடத்தி வருகிறேன் என்றாலும் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in the open Court and read over to the witness and acknowledged by him /her to be Correct.

S NALINAKUMAR

Digitally signed by S NALINAKUMAR
Date: 2026.06.03 18:50:56 +0530

Sub Judge,
Paramathy